## ஓ என் யேசுவே

(ஒவ்வொரு 10 அருள்நிறை சொன்னதும் திரித்துவ தோத்திரத்திற்குப்பின் இந்த ஜெபம் சொல்லவும்.)

ஓ என் யேசுவே. எங்கள் பாவங்களைப்பொறுத்தருளும் எங்களை நரக நெருப்பிலிருந்து இரட்சித்தருளும். சகல ஆத்துமாக்களையும் பரலோகப்பாதையில் நடத்தியருளும். உமது உதவி யாருக்கு அதிக தேவையோ அவர்களுக்கு விஷேஷமாய் உதவியருளும்.

## ஜெபமாலை செய்து முடிந்தபிறகு ஒப்படிக்கும் முறை ஜெபம்

தோத்திரமரி,தோத்திரமே, தேவதோத்திரமே. அர்ச்சியஷ்ட கபிரியேலே இரபிரேலே. அப்போஸ்தலரான இராயப்பரே, சின்னப்பரே, அருளப்பரே, நான் எத்தனை பாவியாகயிருந்தாலும் நான் வேண்டிக் கொண்ட 153 மணி ஜெபமும், நாம் ஆண்டவரிடம் அடைந்த உபகாரத்திற்கு நன்றியாகவும், நமக்கு வேண்டிய சகல உதவிகளையும் பெற்றுத்தாரும். இந்தப் பாவியின் தோத்திரம் ஒன்றாய்க் கூட்டி பரிசுத்தத் தேவமாத திருபாத, பாதக் காணிக்கையாய் வைத்து உம்மைப் பிரார்த்திக்கிறோம்.

(உங்களுடைய தனிப்பட்ட கருத்துக்களை தேவதாயிடம் வேண்டிக்கொள்ளவும்.)

## கிருபதயாபத்து மந்திரம்

கிருபதயாபத்துக்கு மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே வாழ்க! எங்கள் சீவியமே எங்கள் தஞ்சமே, எங்கள் மதுரமே வாழ்க! பரதேசிகளாயிருக்கிற நாங்கள் ஏவையின் மக்கள், உம்மைப் பார்த்துக் கூப்பிடுகிறோம்.

இந்தக் கண்ணீர்க் கணவாயிலே நின்று பிரலாபித்தழுது உம்மையே நோக்கிப் பெருமூச்சு விடுகிறோம். ஆதலால் எங்களுக்காக வேண்டி மன்றாடுகிற தாயே, உம்முடைய தயாளமுள்ள திருக்கண்களை எல்லாம் எங்கள் பேரில் திருப்பியருளும் இதன்றியே நாங்கள் இந்தப் பிரதேசம் கடந்த பிற்பாடு, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுநாதருடைய பிரதியட்சமான தரிசனத்தை எங்களுக்குத் தந்தருளும், கிருபாகரியே, தயாபரியே பேரின்ப இரசமுள்ள கன்னி மரியாயே!

முத : இயேசுகிறிஸ்து நாதருடைய திருவாக்குத் தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரமாயிருக்கத்தக்கதாக.

துணை : சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

மகா பரிசுத்த இயேசுவின் திரு இருதயமே!
எங்கள் பேரில் இரக்கமாயிரும் (மும்முறை)

புனித மரியாயின் மாசற்ற இருதயமே!
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

புனித சூசையப்பரே!
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

புனித மார்கரீத் மரியம்மாளே!
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

*ஜெபமாலை சத்தமாக பலரோடு சொல்லும் போது ஓரிருவர் முதல் பாகத்தைச் சொல்லுவர். மற்றவர்கள் இரண்டாம் பாகத்தைச் சொல்லுவர். ஓ என் யேசுவே கிருபதயாபத்து மந்திரம் இதனை எல்லோரும் சொல்வர்.

1. நரகத்திற்கெதிரான வலிமையுள்ள கேடயமாக இருக்கும் என் ஜெபமாலை தீயப்பழக்கங்களை அழிக்கும், பாவத்திலிருந்து விடுவிக்கும், தப்பறைகளை ஒழிக்கும்.
2. தேவ இரகசியங்களை பக்தியுடன் தியானித்தபடியே ஜெபமாலை சொல்கிறவர்களை எந்தத் துர்பாக்கியமும் மேற் கொள்ளமாட்டாது. அவர்களுக்கு துர்மரணம் நேரிடாது. பாவத்திலிருப்பவர்கள் மனந்திரும்புவார்கள் நல்லவர்கள் தேவ இஷ்டப் பிரசனம் வளர்ந்து நித்திய வாழ்வுக்கு தகுதியுள்ளவர்களாவார்கள்.
3. ஜெபமாலையின் வழியாக நீங்கள் கேட்பவைகளைப் பெற்றுக் கொள்வீர்கள்.
4. தினமும் தவறாமல் என் ஜெபமாலையை ஜெபித்து வருகிறவர்கள் என் அன்புக்குழந்தைகளாயும், யேசுவின் சகோதரரும் சகோதரிகளுமாயிருப்பார்கள்.
5. என்னுடைய ஜெபமாலை மீது பற்றுள்ளவர்கள் என் திருக்குமாரனின் அருளையும் ஆசீரையும் இவ்வாழ்வில் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும், மரணத்திலும் அதற்குப் பின்னும் அவர்கள் எல்லாத்தடைகளிலிருந்தும் விடுபட்டு சிரசில் முடியும், கரத்தில் செங்கோலும் ஏந்தியவர்களாய் அரசர்களைப் போல் நித்திய மகிமையை அனுபவிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

**தினமும் கட்டாயமாக 3 ஜெபமாலை சொல்லவும். பிறகு பரிசுத்த வேதாகமத்தைப் படிக்கவும்.**


**Mr. A. BABU** (BTS Driver Retd.)
House No. 504/3
80 Feet Road Cross, 3rd Cross
Subbaiahnapalya Extn., Banaswadi Post
Bangalore-560 043.

**NOT FOR SALE**

# ஜெபமாலை செய்வது எப்படி?

## ஒளியின் தேவ இரகசியங்கள் உள்ளன




1. சிலுவை அடையாளம் வரைந்து விசுவாச பிரமாணம் சொல்.
2. கர்த்தர் கற்பித்த ஜெபம் சொல்.
3. 3 அருள் நிறை மந்திரம் சொல்.
4. திரித்துவ தோத்திரம் சொல்.
5. முதல் தேவ இரகசியம் சொல்லி பரலோக மந்திரம் சொல்.
6. 10 அருள் நிறை மந்திரம் சொல்.
7. திரித்துவ தோத்திரம் சொல்.
8. ஓ என் யேசுவே நரக நெருப்பினின்று என்னும் ஜெபம் சொல்.
9. இரண்டாம் தேவ இரகசியம் கர்த்தர் கற்பித்த ஜெபம் 10-அருள் நிறை திரித்துவ தோத்திரம் ஓ என் யேசுவே சொல்.
10. 3 ம் தேவ இரகசியம் சொல்லி 9 ம் எண்படி செபி.
11. 4 ம் தேவ இரகசியம் சொல்லி 9 ம் எண்படி செபி.
12. 5 ம் தேவ இரகசியம் சொல்லி 9 ம் எண்படி செபி.
13. கிருபை தயாபத்து மந்திரம் சொல்லிமுடி.

## சிலுவை அடையாளம்

+ அர்ச்சியஷ்ட சிலுவை அடையாளத்தினாலே + எங்கள் சத்துருக்களிடமிருந்து எங்களை இரட்சித்தருளும் + எங்கள் சர்வேசுரா/பிதா/சுதன்/பரிசுத்த ஆவியின் பெயராலே, ஆமென்.

## ஜெபமாலையின் தேவ இரகசியங்கள்

(தியானிக்க வேண்டியவை)

### சந்தோஷ தேவ இரகசியங்கள்


(ஆகமனகால முதல் ஞாயிறு முதல் தவக்காலம் வரை திங்கள், வியாழன், ஞாயிறு நாட்களில்)




1. கபிரியேல் மரியாளுக்கு மங்களவார்த்தை சொன்னது.
2. மரியாள் எலிசபெத்தைச் சந்தித்தது.
3. இயேசு பிறந்தது.
4. இயேசுவைக் கோயிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தது.
5. காணாமல் போன யேசுவைக் கோயிலில் கண்டது.

### துக்க தேவ இரகசியங்கள்


(தவக்காலத்தில் செவ்வாய், வெள்ளி, ஞாயிறு நாட்களில்)




1. பூங்காவில் இரத்த வியர்வை விட்டது.
2. கற்றூணில் கட்டுண்டு அடிப்பட்டது.
3. முள்முடி சூட்டப்பட்டது.
4. சிலுவை சுமந்து சென்றது.
5. இயேசு சிலுவையில் அறையப்பட்டு இறந்தது.

### மகிமை தேவ இரகசியங்கள்


(உயிர்ப்பு விழாவிலிருந்து, புதன், சனி, ஞாயிறு நாட்களில் ஆகமன காலம் வரை)




1. கர்த்தர் உயிர்த்தது.
2. பரலோகத்திற்கு ஆரோகனம் ஆனது.
3. தூய ஆவி அப்போஸ்தலர்கள் மீது வந்தது.
4. தேவதாய் விண்ணேற்றமானது.
5. தேவதாய்க்கு இராக்கினியாக முடி சூட்டப்பட்டது.

### ஒளியின் தேவ இரகசியங்கள்

(வியாழக்கிழமைகளில் தியானிப்பது நல்லது, சனிக்கிழமைகளிலும் தியானிக்க திருத்தந்தை இரண்டாம் சின்னப்பர் அனுமதி வழங்கியுள்ளார்)




1. யோர்தானில் இயேசுவின் திருமுழுக்கு.
2. கானாவூர் திருமணத்தில் நிகழ்ந்த இயேசுவின் முதல் அருங்குறி.
3. இயேசுவின் இறையாட்சி பற்றிய அறிவிப்பு.
4. தபோர் மலையில் நிகழ்ந்த இயேசுவின் தோற்றம்.
5. இயேசுவின் இறுதி உணவில் நற்கருணை ஸ்தாபித்தல்.

## விசுவாசப் பிரமாணம்

பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரனை விசுவசிக்கிறேன். அவருடைய ஏக சுதனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவை விசுவசிக்கிறேன். இவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாய் உற்பவித்துக் கன்னிமரியாவிடமிருந்து பிறந்தார் போஞ்சு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டு சிலுவையில் அறையுண்டு மரித்து அடக்கஞ்செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி மூன்றாம் நாள் மரித்தோரிடமிருந்து உயிர்தெழுந்தார். பரலோகத்திற்கு எழுந்தருளி எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரனுடைய வலது பக்கத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து சீவியரையும் மரித்தவரையும் நடுதீர்க்க வருவார். பரிசுத்த ஆவியை விசுவசிக்கிறேன். பரிசுத்தக் கத்தோலிக்கத் திருச்சபையை விசுவசிக்கிறேன். அர்ச்சியஷ்டவர்களுடைய சமூதிதப் பிரயோசனத்தை விசுவசிக்கிறேன். பாவப்பொருத்தலை விசுவசிக்கிறேன். சரீர உத்தானத்தை விசுவசிக்கிறேன். நித்திய ஜீவியத்தை விசுவசிக்கிறேன். ஆமென்.

## கர்த்தர் கர்ப்பித்த ஜெபம்

பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக உம்முடைய இராச்சியம் வருக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூலோகத்திலும் செய்யப்படுவதாக. எங்கள் அனுதின உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும். எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் பொருப்பது போல எங்கள் பாவங்களைப் பொருத்தருளும். எங்களை சோதனையில் விழவிடாதேயும் தீமையிலிருந்து எங்களை இரட்சித்தருளும். ஆமென்.

## மங்கள வார்த்தை ஜெபம்

அருள் நிறைந்த மரியே வாழ்க. கர்த்தர் உம்முடனே. பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள். நீரே. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக் கப்பட்டவரே. அர்ச்சியஷ்ட மரியே. சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாகிய எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரணநேரத்திலும் வேண்டிக்கொள்ளும். ஆமென்.

## திரித்துவ தோத்திரம்

பிதாவுக்கும் சுதனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக. ஆதியில் இருந்தது போல் இன்றும் என்றும் சதாகாலமும் இருப்பதாக. ஆமென்